Supervisors of Municipal Elementary Schools

* 161 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the raised age of superannuation of 58 is applicable to Supervisors of Municipal Elementary Schools; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) எழவில்லை.

Hindi Teachers

* 162 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether alternative employment will be provided to the Hindi Teachers who have lost their jobs as a result of the language policy of the Tamil Nadu Government;

(*b*) the amount of expenditure incurred on these teachers in 1967–68; and

(*c*) the amount of grant sanctioned therefor by the Central Government in 1967-68?

இந்தி ஆசிரியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு மொழிக் கொள்கையினால் வேலை இழந்த இந்தி ஆசிரியர்களுக்கு வேறு வேலை அளிக்கப்படுமா ?

(இ) இவர்களுக்கு 1967-68-ஆம் நிதி ஆண்டில் எவ்வளவு செலவானது ?

(உ) மத்திய சர்க்கார் இதற்காக 1967-68-ஆம் நிதி ஆண்டில் உதவியது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ் மாதவன் : (அ) ஆம்.

(இ) ரூ. 38,38,582.

(உ) அதிக ஆசிரியர்களை நியமித்ததின் விளைவாக ஏற்பட்ட செலவாகிய ரூ. 60,814-க்கு இந்திய அரசிடமிருந்து உதவித் தொகை கோரப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படுவதாகக் கூறினார்கள். இரண்டு மூன்று வருஷங்களாக வேலை தொடர்ந்து பார்த்து வரும் ஆனால் நிரந்தரம் பெறாத இந்தி ஆசிரியர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் 1,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS